DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.

Case No.CC 74/2019

Prosecution witness – PW.8

| | | |
|---|---|---|
| Name | :திரு.கார்த்திக் | Caste: |
| Father's Name | :முத்துகண்ணு | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

19.05.2025 – 03.40 PM

எதிரி ஆஜர் இல்லை. எதிரிக்காக மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

சாட்சி கு.வி.மு.ச பிரிவு 311ன் கீழ் மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.

குறுக்கு விசாரணை:–

1. உலக்குடியைச் சேர்ந்த முத்துச்சாமி என்பவர் மூலம் சேம்பருக்கு வேலைக்கு வந்ததாக போலீசார் விசாரணையின் போது கூறினேனா என்றால் ஆமாம் கூறினேன். நான் அவ்வாறு கூறவில்லை என்றால் சரியல்ல. நான் ஊரில் மழை பெய்யாததால் கஷ்டம் காரணமாக வேலைக்கு வந்ததாக போலீசார் விசாரணையின் போது கூறினேனா என்றால் ஆமாம். நான் அவ்வாறு கூறவில்லை என்றால் சரியல்ல.

2. சுமார் 6 மாதங்கள் சேம்பரில் வேலை செய்த போது அங்கே நான் தங்குவதற்கு ஓட்டு வீடு அமைத்துக் கொடுத்ததாகவும், ஒரு நாளுக்கு 1000 கல் வீதம் 1 வாரத்திற்கு 5000 கற்கள் அறுத்ததாகவும், அதில் ஏற்கனவே முன்பணமாக வாங்கிய ரூ.40,000/–த்திலிருந்து சம்பளத்தை கழித்துக் கொள்வார்கள் என்றும், ஒரு நாள் எனது மனைவி ரேஷன் கடையில் அரிசி வாங்குவதற்காக என்னையும் எனது குழந்தைகளையும் விட்டுவிட்டு ஊருக்கு சென்றிருந்தபோது அன்றிரவு எனது மனைவி திரும்ப வராததால் சேம்பரின் உரிமையாளர் என்னை பச்சைக் கம்பால்

அடித்து சேம்பரில் உள்ள கல் எரியும் இடத்தில் கட்டி வைத்தார் என்றும் அப்போது அங்கு இருந்த எங்கள் ஊரைச் சேர்ந்த உடனிருந்த நபர்கள் யாரும் இதை கேட்க வந்தால் உங்களையும் அடிப்பேன் என்று சொன்னதாகவும், போலீசார் விசாரணையின் போது கூறினேனா என்றால் ஆமாம் கூறினேன். நான் கூறியது போல போலீசார் விசாரணையின் போது மேற்படி சங்கதிகளை சொல்லவில்லை என்றால் சரியல்ல.

3. பிறகு சேம்பருக்குள் என்னுடன் இருந்த நபர்கள் பயந்து கொண்டு உட்கார்ந்திருந்ததாகவும் மறுநாள் எனது பிள்ளைகளை சேம்பரில் விட்டுவிட்டு உரிமையாளருக்கு தெரியாமல் வெளியில் சென்றேன் என்றும், மறுநாள் அருப்புக்கோட்டை கோட்டாட்சியரிடம் சென்று கொடுமை குறித்து சொன்னதாகவும் அதன் பேரில் காரியாபட்டி, கமுதி ஊர் வட்டாட்சியர்கள் வந்து விசாரித்தாகவும் போலீசார் விசாரணையின் போது கூறினேனா என்றால் ஆமாம் கூறினேன். நான் கூறியது போல போலீசார் விசாரணையின் போது மேற்படி சங்கதிகளை சொல்லவில்லை என்றால் சரியல்ல.

4. 2012ம் வருடம் 9ம் மாதம் அருப்புக்கோட்டை கோட்டாட்சியரிடம் சென்று சம்பவம் குறித்து கூறினேன். எனக்கு தேதி சரியாக நினைவில் இல்லை. என்னை நான் அளித்த வாய்மொழி புகாரின் பேரில் கமுதி, காரியாபட்டி வட்டாட்சியர்கள் வந்து விசாரித்தார்கள். காரியாபட்டி, கமுதி வட்டாட்சியர்கள் என்னை விசாரித்து விபரங்களை எழுதிக் கொண்டார்களா என்றால் ஆமாம், எழுதிக் கொண்டார்கள். அதில் நான் கையொப்பம் செய்தேனா என்றால் இல்லை.

5. வட்டாட்சியர் வந்து எங்களை மீட்டு அபிராமம் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றுவிட்டு எனது சொந்த ஊரான S.மறைக்குளத்திற்கு சென்று என்னை விட்டுவிட்டார்கள். அன்றைய

தினம் எனது சொந்த ஊரில் வட்டாட்சியர் என்னை வேனிலிருந்து இறக்கிவிட்டபோது கொத்தடிமை தொழிலாளர் நீக்க சான்றிதழ் ஏதேனும் கொடுத்தாரா என்றால் ஆமாம், கொடுத்தார். அதை பரமக்குடி கோட்டாட்சியர் அவர்கள் என்னிடம் தந்தார். அப்படி எனக்கு சான்றிதழ் வழுங்கப்பட்ட விபரத்தை போலீசார் விசாரணையின் போது கூறியுள்ளேனா என்றால் ஆமாம், கூறியுள்ளேன். அந்த சான்றிதழை போலீசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் சம்பவம் நடந்தற்கு பின்னதாக ஒரு வாரம் கழித்து எனக்கு சான்றிதழ் கிடைக்கப்பெற்றது. அதனால் போலீசாரிடம் ஒப்படைக்கவில்லை. அதன் பிறகு வருவாய்துறையிடமிருந்து மறுவாழ்வு நிமித்தம் உதவித்தொகை ஏதேனும் பெற்றேனா என்றால் ஒரு வாரம் கழித்து எனக்கு ரூ.19,000/–மும், எனது மனைவிக்கு ரூ.19,000/–மும் கிடைக்கப்பெற்றேன். இந்த விபரத்தையும் போலீசார் விசாரணையில் தெரிவித்துள்ளேன்.

6. சேம்பரின் உரிமையாளர் யார் என்பதை அறிந்து கொள்ளும் விதமாக ஏதேனும் ஆவணங்களை போலீசாரிடம் கொடுத்தேனா என்றால் என்னிடம் ஆவணங்கள் இருந்ததா என்று எனக்கு நினைவில் இல்லை. அதனால் நான் போலீசாரிடம் எந்த ஆவணத்தையும் கொடுக்கவில்லை. நான் சேம்பரில் வேலை செய்ததாக சொல்வதற்கு ஆவணங்களோ அங்கு முன்பணம் பெற்றதாக சொல்வதற்கு ஆவணங்களோ அதிலிருந்து எனது சம்பளத்தை பிடித்தம் செய்ததாக சொல்வதற்கு ஆவணங்களோ ஒரு நாளைக்கு நான் எவ்வளவு கற்களை அறுத்தேன் என்பதற்கு ஆதரவாக ஆவணங்களோ, ஒரு நாளைக்கு எவ்வளவு கூலி என்பதற்கு ஆதரவாக ஆவணங்களோ ஏதேனும் போலீசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் என்னிடமிருந்து ஒரு பத்திரத்தில் கையொப்பம் மட்டுமே வாங்கிக் கொண்டார்கள். எங்கள் வசம் எவ்வித ஆவணங்களையும்

ஒப்படைக்கவில்லை. அதனால் நானும் போலீசாரிடம் ஆவணம் எதுவும் கொடுக்கவில்லை.

7. நான் எவ்வளவு நாள் சேம்பரில் வேலை செய்து எவ்வளவு செங்கற்கள் அறுத்தேன் என்பதற்கும் ஆவணங்கள் இல்லை என்றால் என் வசம் அவ்வாறு ஆவணங்கள் எதுவும் இல்லை. எதிரி மூர்த்தி என்பவர் அழைத்து சென்று அவரது சேம்பரில் நான் வேலை செய்ததற்கு ஆவணங்கள் இல்லை என்றால் என்னிடம் இல்லை. ஆனால் அவர் தான் அழைத்துச் சென்றார். கொத்தடிமை தொழிலாளர் மீட்பு சான்றிதழ் என்னிடம் தற்போது உள்ளதா என்றால் உள்ளது. போலீசார் என்னிடம் மேற்படி சான்றிதழை பற்றி கேட்டார்களா என்றால் ஆமாம் கேட்டார்கள். நானும் போலீசாரிடம் காண்பித்தேன். போலீசார் என்னிடமிருந்து அந்த சான்றிதழை வாங்கவில்லை என்றால் சரிதான். தேவைப்படும் போது பெற்றுக்கொள்வதாக கூறினார்கள்.

8. சேம்பரில் இருந்து என்னை கமுதி வட்டாட்சியர், அருப்புக்கோட்டை வட்டாட்சியர், நரிக்குடி காவல்துறையினர் மற்றும் அபிராமம் காவல் துறையினர் ஆகியோர்கள் அழைத்துச் சென்றார்கள்.

9. சுகன்யா சேம்பர் என்ற பெயரில் அபிராமத்தில் எந்த சேம்பரும் இல்லை என்றால் சரியல்ல. அதற்கு மூர்த்தி உரிமையாளர் இல்லை என்றால் சரியல்ல. நாங்கள் சுகன்யா சேம்பரில் வேலை செய்யவில்லை என்றால் சரியல்ல. புள்ளி விபரத்திற்காக போடப்பட்ட பொய்யான வழக்கை அனுசரித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(ஒம்./– G. தங்க கார்த்திகா)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கமுதி